# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0602/ஊராட்சி/2018

ஆணை எண்: 129/2018

நாள்: 25/05/2018

K. சொக்கையன், – மனுதாரர்
பி.மலையூர், லிங்கவாடி ஊராட்சி,
நத்தம் ஊராட்சி ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம் – 624 401.

1. வட்டார வளர்ச்சி அலுவலர்,
   அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம்,
2. ஊராட்சி செயலாளர்,
   வலையபட்டி ஊராட்சி. – எதிர் மனுதாரர்கள்

## ஆணை

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், வலையப்பட்டி ஊராட்சி செயலர், ஊராட்சியில் செய்துள்ள முறைகேகளை வெளியடுத்திட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் வழங்க ஊராட்சி செயலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் அலங்காநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர்களை கோரியதாகவும், ஆனால் அதிகாரிகள் யாரும் தகவல்களை வழங்காததால் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு மனு அனுப்பி விசாரிக்க கோரியதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரர் அனுப்பிய புகார் மதுரை மாவட்ட தனித் துணை ஆட்சியர் (ச.பா.தி.) மூலமாக உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. ஆனால் உதவி இயக்குநர் அவர்கள் விசாரணை ஏதும் மேற்கொள்ளாமல், அலங்காநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு (கி.ஊ) அனுப்பி வைத்து ஊராட்சிச் செயலர் மீது வருமானத்திற்கு அதிகமான நிலங்கள் வழங்கியது உள்ளிட்ட பல்வேறு

புகார்கள் மேற்காணும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், புகார்கள் தொடர்பாக ஊராட்சி செயலாளர் மீது விசாரணை மேற்கொண்டு, அதன் அறிக்கையினை மனுதாரருக்கும் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும் தெரிவிக்குமாறு 21.12.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் ஆனால் இதுநாள் வரை நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லையென தெரிவித்து, மனுதாரரின் புகார் மனுவினை விசாரித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

2018-ஆம் ஆண்டு மே திங்கள் 25-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

K. [illegible],
பிமலையூர், விங்கவாடி ஊராட்சி,
நத்தம் ஊராட்சி ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம் – 624 401.

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   மதுரை மாவட்டம், மதுரை. (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவரின் நேர்முகத் எழுத்தர்
3. உதவி பிரிவு அலுவலர் (ஊராட்சி)